**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி, திண்டுக்கல் மாவட்டம்**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி, எம்.எல்.,**

**கூடுதல் சார்பு நீதிபதி, பழனி.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**(திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 03 ஆம் நாள்)**

**மேல்முறையீட்டு வழக்கு எண் : 1/2021**

**[CNRNO : TNDG07 – 000092 - 2021]**

**C/W**

**மேல் முறையீட்டு வழக்கு எண் : 2/2021**

**[CNRNO : TNDG07 – 000113 - 2021]**

**உள்**

**அசல் வழக்கு எண் : 4/2016**

**[CNRNO : TNDG08 – 000014 – 2016]**

**<u>மேல்முறையீட்டு வழக்கு எண் : 1/2021</u>**

1. ஸ்ரீராஜலட்சுமி ஹோட்டல்ஸ் (பி) லிட்.,
அதன் நிர்வாக இயக்குநர் மூலம்
2. R. சூர்யநாராயணன் --- மேல்முறையீட்டாளர்கள்/1, 3 பிரதிவாதிகள்

/எதிர்/

1. M. ராதாகிருஷ்ணன்
2. V. அருணாச்சலம்
3. K. ராஜா
4. K. ரவி
5. N. கண்ணன் --- 1 முதல் 5 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/ வாதிகள்
6. R. சிவராமன் --- 6–ம் எதிர்மேல்முறையீட்டாளர்/ 2–ம் பிரதிவாதி

பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அ.வ.எண்.4/2016 வழக்கில் கடந்த 21.12.2020 ஆம் தேதியில் பிறப்பித்துள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இடையே**

**<u>விசாரணை நீதிமன்றத் தப்பினர்கள் : –</u>**

1. M. ராதாகிருஷ்ணன்
2. V. அருணாச்சலம்
3. K. ராஜா
4. K. ரவி
5. N. கண்ணன் --- வாதிகள்

/எதிர்/

1. ஸ்ரீராஜலட்சுமி ஹோட்டல்ஸ் (பி) லிட்.,
அதன் நிர்வாக இயக்குநர் மூலம்
2. R. சிவராமன்
3. R. சூர்யநாராயணன் --- பிரதிவாதிகள்

**<u>மேல்முறையீட்டு வழக்கு எண் : 2/2021</u>**

R. சிவராமன் --- மேல்முறையீட்டாளர்/2–ம் பிரதிவாதி

/எதிர்/

1. M. ராதாகிருஷ்ணன்
2. V. அருணாச்சலம்
3. K. ராஜா
4. K. ரவி
5. N. கண்ணன் --- 1 முதல் 5 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/ வாதிகள்

6. 1. ஸ்ரீராஜலட்சுமி ஹோட்டல்ஸ் (பி) லிட்.,
அதன் நிர்வாக இயக்குநர் மூலம்
7. R. சூர்யநாராயணன் --- 6, 7 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/ 1, 3 பிரதிவாதிகள்

பழனி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அ.வ.எண்.4/2016 வழக்கில் கடந்த 21.12.2020 ஆம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இடையே**

<u>விசாரணை நீதிமன்றத் தப்பினர்கள் : –</u>

1. M. ராதாகிருஷ்ணன்
2. V. அருணாச்சலம்
3. K. ராஜா
4. K. ரவி
5. N. கண்ணன் --- வாதிகள்

/எதிர்/

1. ஸ்ரீராஜலட்சுமி ஹோட்டல்ஸ் (பி) லிட்.,
அதன் நிர்வாக இயக்குநர் மூலம்
2. R. சிவராமன்
3. R. சூர்யநாராயணன் --- பிரதிவாதிகள்

மே.மு.வ.எண்.1/2021 வழக்கானது 21.01.2021 ஆம் தேதியன்றும், மே.மு.வ.எண்.2/2021 வழக்கானது 02.02.2021 ஆம் தேதியன்றும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மேற்படி மேல்முறையீடுகள் 16.03.2026 ஆம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்ததில், மே.மு.வ.எண்.1/2021 வழக்கின் மேல்முறையீட்டாளர்/1, 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் K. பாலசுப்பிரமணியன் மற்றும் அனிருத் R. கர்கா ஆகியோர் முன்னிலையாகியும், 1 முதல் 5 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் V. முத்துக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 6–ம் எதிர்மேல்முறையீட்டாளர்/2–ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் P. மகேந்திரன் மற்றும் B. மனோகரன் ஆகியோர் முன்னிலையாகியும், மே.மு.வ.எண்.2/2021 வழக்கின் மேல்முறையீட்டாளர்/2–ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் P. மகேந்திரன் மற்றும் B. மனோகரன் ஆகியோர் முன்னிலையாகியும், 1 முதல் 5 எதிர்மேல்முறையீட்டாளர்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் V. முத்துக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 6, 7 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/1, 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் K. பாலகிருஷ்ணன் மற்றும் அனிருத் R. கர்கா ஆகியோர் ஆகியோர் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களையும், விசாரணை நீதிமன்றத்தில்

முன்னிலைப்படுத்திய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்,

**பொதுவான தீர்ப்புரை**

விசாரணை நீதிமன்றமான பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.4/2016 வழக்கில் வாதிகளின் வழக்கு அனுமதிக்கப்பட்டு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கின் தீர்ப்பாணையில் மனக்குறைவுற்ற அ.வ.எண்.4/2016 வழக்கின் 1, 3 பிரதிவாதிகள் மே.மு.வ.எண்.1/2021 வழக்கும், 2–ம் பிரதிவாதி மே.மு.வ.எண்.2/2021 வழக்கும் தாக்கல் செய்துள்ளனர்.

விசாரணை நீதிமன்றத்தில் அ.வ.எண்.4/2016 வழக்கில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்விரு மேல்முறையீட்டின் மேல்முறையீட்டாளர்கள் அசல் வழக்கு எண்.4/2016 வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகள் என்றும், 1 முதல் 5 எதிர்மேல்முறையீட்டாளர்கள் வாதிகள் என்றும் விசாரணை நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டுள்ளது போல் வசதி மற்றும் சௌகரியத்திற்காக தரப்பினர்கள் இவ்விரு மேல்முறையீட்டு வழக்கிலும் அழைக்கப்படுவார்கள்.

**2. மேல் முறையீட்டு வழக்கு எண் : 1/2021:–**

**அ.வ.எண்.4/2016 வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் வாதிகள் தரப்பு வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு : –**

2.1. 1 முதல் 4 வாதிகளும், 1–ம் பிரதிவாதியும் சேர்ந்து தாவா முதல் இலக்கச் சொத்தைப் பொறுத்து கடந்த 14.01.1995 அன்று பதிவு செய்யப்படாத வாடகை ஒப்பந்தம் எழுதிக்கொண்டனர். அதன்படி வாதிகள் முன்பணமாக ரூ.2,50,000/– செலுத்தியுள்ளனர். வாதிகள் மேற்படி சொத்தில் சுவாதீனத்தில் இருந்து "ஸ்ரீ ஆரிய பவன் ஹோட்டல்" என்ற உணவு விடுதியை நடத்தி வருகிறார்கள். மேற்படி உணவு விடுதிக்கு வரும் வாடிக்கையாளர்களின் வாகனங்களை நிறுத்த வழக்கு 2–ம் இலக்கக் காலியிடத்தை வாடகைக்குப் பெறுவதற்காக வாதிகளின் சார்பில் 3 மற்றும் 4 வாதிகளும், 1–ம் பிரதிவாதியின் சார்பில் 3–ம் பிரதிவாதியும் சேர்ந்து கடந்த 20.02.2010

அன்று பதிவு செய்யப்படாத வாடகை ஒப்பந்தத்தை எழுதிக்கொண்டு அப்போதுமுதல் 2-ம் இலக்கச் சொத்தை வாதிகள் வாடகைதாரர்களாக இருந்து அனுபவித்து வருகின்றனர். அதற்காக ரூ.1,00,000/-ஐ முன்பணமாக செலுத்தியுள்ளனர். 14.01.1995 ஒப்பந்தத்தின்படி தாவா 1 இலக்கச் சொத்திற்கு மாத வாடகையாக ரூ.10,000/- செலுத்தப்பட்டு வருகிறது. தாவா 2 இலக்கச் சொத்திற்கு மாத வாடகையாக ரூ.1,000/- செலுத்தப்பட்டு வருகிறது. கடந்த 8 மாதங்கள் முன்பு வரை எவ்வித பிரச்சனையும் இல்லாமல் வழக்குச் சொத்துக்களை வாதிகள் அனுபவித்து வந்தனர். 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் தந்தையான ராஜசேகரன் காலமாகிவிட்ட நிலையில் குடும்பச் சொத்துக்களைப் பொறுத்து 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்குள் பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளது. வாடகை ஒப்பந்தத்திற்கு முரணாக மாத வாடகையை பல மடங்கு உயர்த்திக் கொடுக்கும்படி கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம் முதல் வாதிகளை வற்புறுத்தி வருகின்றனர். அதற்கு மறுத்தால் வாதிகளை சட்டத்திற்கு முரணான வகையில் வெளியேற்றிவிடப் போவதாக மிரட்டி வருகின்றனர். பிரதிவாதிகள் கடந்த 22.12.2015 அன்று வழக்குச் சொத்துக்களில் அத்து மீறி நுழைந்து வாதிகளை காலி செய்யும்படி மிரட்டினர். பொதுமனிதர்கள் உதவியுடன் வாதிகள் அதனைத் தடுத்துவிட்டனர். எனவே, வழக்குச் சொத்துக்களில் இருந்து வாதிகளை சட்டப்படியான வழிகளின் மூலம் வெளியேற்றும் வரை வாதிகளுக்குள்ள சுவாதீன அனுபவத்திற்கு தடையோ, இடைஞ்சலோ செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. அ.வ.எண்.4/2016 வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் 1-ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 3-ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு :-</u>**

3.1. வாதிகளின் வழக்கு பொய்யானது. 3-ம் பிரதிவாதி அவருக்காக தனிப்பட்ட முறையிலும், 1-ம் பிரதிவாதி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் என்ற முறையிலும் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர். 1 மற்றும் 2 வழக்கு ஆவணங்கள் பதிவு செய்யப்படாதவை என்பதாலும், ரூ.100/-க்கு மேலான தொகைக்கு ஒரு வருட காலத்திற்கும் மேலாக குறிப்பிட்டு ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாலும்,

தகுந்த முத்திரைக் கட்டணம் செலுத்தப்படாததாலும் அவை ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணங்கள் அல்ல. 3–ம் பிரதிவாதி 1–ம் பிரதிவாதி நிறுவனத்தின் நிர்வாக பங்குதாரர் ஆவார். 1–ம் பிரதிவாதி லாட்ஜ் நடத்தி தொழில் நடத்தி வருகிறார். வாதிகளால் உணவகம் நடத்துவதற்காக வழக்குச் சொத்தானது வாடகைக்கு பெறப்பட்டுள்ளது. வழக்குச் சொத்து பழனி பேருந்து நிலையத்தின் எதிரில் அமைந்துள்ள மதிப்பு மிக்க சொத்தாகும். வாதிகளும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் நல்ல உறவுடன் இருந்து வருகிறார்கள். வாடகையை உயர்த்துவது பற்றி சுமூகமாக பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இவ்வாறான நிலையில், வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர். 3–ம் பிரதிவாதி, வாதிகளை மிரட்டியதாகச் சொல்வது தவறு. அவர் எப்போதும் வாதிகளின் சுவாதீனத்திற்கும், அனுபவத்திற்கும் இடைஞ்சல் செய்தது இல்லை. தற்போதும் வாதிகள் அமைதியான முறையில் வழக்குச் சொத்தில் தொழில் நடத்தி வருகின்றனர். 22.12.2015 அன்று 3–ம் பிரதிவாதி வழக்குச் சொத்தில் இருந்து வாதிகளை வெளியேற்ற முயன்றதாக கூறுவது தவறு. வாதிகளுடன் 3–ம் பிரதிவாதி நல்ல நட்புடன் இருந்து வருகிறார். வாதிகள் கூறியுள்ள வழக்குமூலம் பொய்யானது. வாதிகள் செலுத்தியுள்ள நீதிமன்றக் கட்டணம் தவறானது. தாவா தள்ளுபடியாக வேண்டும்.

**<u>4. அ.வ.எண்.4/2016 வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் 2–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு :–</u>**

4.1. வாதிகளின் வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல. வாதிகளும், 1–ம் பிரதிவாதியும் கடந்த 14.01.1995 அன்று பதிவு செய்யப்படாத வாடகை ஒப்பந்தம் எழுதிக் கொண்டதாகவும், உணவு விடுதி நடத்தி வருவதாகவும் கடந்த 20.02.2010 அன்று வாடகை ஒப்பந்தம் எழுதிக்கொண்டு 2–ம் இலக்கச் சொத்தை அனுபவித்து வருவதாகவும் கூறியுள்ளதை 2–ம் பிரதிவாதி மறுக்கிறார். 14.01.1995 தேதியிட்ட பதிவில்லாத வாடகை ஒப்பந்தம் மோசடியானது. 2–ம் இலக்கச் சொத்து ஆதியில் தியாகராஜன் வகையறாவுக்குப் பாத்தியப்பட்டு, அதன் பின் ராஜசேகரன், சகுந்தலா, 2, 3 பிரதிவாதிகள், உஷாராணி, வசந்தகுமாரி மற்றும் பரமேஸ்வரி ஆகியோர்களுக்கு 02.03.1990 ஆம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் பாத்தியம்.

மற்ற நபர்களின் அனுமதியுடன் 2–ம் பிரதிவாதிதான் வழக்குச் சொத்தை நிர்வாகம் செய்து வருகிறார். தனிப்பட்ட முறையில் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொடுக்க 1, 3 பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. வழக்குச் சொத்துக்களை 1, 3 பிரதிவாதிகள் எப்போதும் அனுபவித்தது கிடையாது. 1–ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு பாத்தியம் இல்லாத வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து வாடகை ஒப்பந்தங்கள் ஏற்படுத்தியுள்ளது தவறு. வாதிகள் வில்லங்கங்கள் ஏற்படுத்தும் நோக்கத்துடன் 1, 3 பிரதிவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர். முறையான உரிமையாளரிடம் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தவில்லை. வாடகையை பல மடங்கு உயர்த்திக் கொடுக்கும்படி வற்புறுத்தியதாகவும், வழக்குச் சொத்துக்களில் அத்துமீறி நுழைந்து காலி செய்யும்படி மிரட்டியதாகவும் கூறியுள்ள சங்கதிகள் உண்மைக்குப் புறம்பானவை. தாவா தள்ளுபடியாக வேண்டும்.

**<u>5. அ.வ.எண்.4/2016 வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.</u>**

1. வாதிகளுக்கு பிராதில் கோரியுள்ளபடி நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கிடைக்கத்தக்கதா? இல்லையா?
2. வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

**<u>6. 4. அ.வ.எண்.4/2016 வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் கீழ்க்கண்ட கூடுதல் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.</u>**

1. செலுத்தப்பட்டுள்ள நீதிமன்றக் கட்டணம் சரியானதா?
2. இவ்வழக்கை முடிவு செய்ய இந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளதா?

**<u>7. விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினர்கள் முன்னிலைப்படுத்திய சாட்சிய, சான்றாவண விவரங்கள் : –</u>**

7.1. அசல் வழக்கு எண்.4/2016 வழக்கில் வாதிகள் தரப்பில் 4–ம் வாதி திரு. ரவி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.17 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 2–ம் பிரதிவாதி திரு. சிவராமன் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தரப்பில்

பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**8. மேல்முறையீட்டு வழக்கு எண்.1/2021 மேல்முறையீட்டிற்கான காரணங்கள் : –**

8.1. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சட்டத்திற்கும், சாட்சிய மதிப்பீடுகளுக்கும் முரணானது. விசாரணை நீதிமன்றம் வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்திருக்கவேண்டும். வா.சா.1 தனது சாட்சியத்தில் 3–ம் பிரதிவாதிக்கும், அவருக்கும் எவ்வித தாவாவும் இல்லை என்றும், அவர் நட்புடன்தான் உள்ளார் என்றும், 2–ம் பிரதிவாதி தான் தகராறு செய்கிறார் என்றும், 2–ம் பிரதிவாதிதான் இடைஞ்சல் செய்கிறார் என்றும் கூறியுள்ளதை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை. விசாரணை நீதிமன்றம் 2–ம் பிரதிவாதியை 16.03.2020 அன்று வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது 2–ம் பிரதிவாதி வாதிகளுக்கு இடைஞ்சல் செய்ததாக கேள்விகள் கேட்டுள்ளதை கருத்தில் கொள்ளவில்லை. இவ்வாறான நிரந்தர உறுத்துக்கட்டளைகள் தவறாகப் பயன்படுத்தப்பட முடியும் என்பதை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை. வாதிகளுக்கு 3–ம் பிரதிவாதியால் இடைஞ்சல் நடந்திருந்தால் மட்டுமே நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கப்பட முடியும் என்பதை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ள தவறிவிட்டது. பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் 22.01.2020 அன்று 1–ம் பிரதிவாதி நிறுவனத்தில் அவருக்குள்ள பங்கை 3–ம் பிரதிவாதிக்கு விற்றுவிட்டார் எனக் கூறியுள்ளதை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பானது மேற்படி சங்கதிக்கு விரோதமாக அமைந்துள்ளது. எனவே, பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அ.வ.எண்.4/2016 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையானது மாற்றியமைக்கப்பட்டு, 1 மற்றும் 3 பிரதிவாதிகளைப் பொறுத்து வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**9. மேல்முறையீட்டு வழக்கு எண்.2/2021 மேல்முறையீட்டிற்கான காரணங்கள் : –**

9.1. விசாரணை நீதிமன்றம் 2–ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரை, 2–ம் பிரதிவாதியின் ஆவணங்கள் மற்றும் அவரது சாட்சிய வாக்குமூலம் ஆகியவற்றை சரியாகப் பரிசீலிக்காமல் வாதிகளின் வழக்கை அனுமதித்துள்ளது. விசாரணை

நீதிமன்றம் பி.வா.சா.ஆ.1–ன்படி 7 நபர்களுக்கு கூட்டாகப் பாத்தியப்பட்ட சொத்தைப் பொறுத்து மற்ற பாகஸ்தர்களைத் தவிர்த்துவிட்டு ஏற்படுத்தப்பட்ட வாடகை ஒப்பந்தங்கள் செல்லத்தகாதவை என்பதைக் கருத்தில் கொள்ளவில்லை. வா.சா.ஆ.1 தயார் செய்வதற்கு முத்திரைத்தாள் வாங்கப்பட்ட நாள் என 05.08.1995 எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலையில் ஒப்பந்தம் ஏற்பட்ட நாளாக 14.01.1995 என்று முன் தேதியிட்டு குறிப்பிடப்பட்டுள்ளதன் முரண்பாடுகளை கருத்தில் கொள்ளவில்லை. அப்பீல் வாதியின் பெயர் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ள நிலையிலும், வழக்குச் சொத்து 7 நபர்களுக்குப் பாத்தியப்பட்டது என்றும் வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 ஆவணங்களை சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என விசாரணை நீதிமன்றம் முடிவு செய்திருக்கவேண்டும். சொத்து விபரம் பற்றி வா.சா.1 முரண்பாடாக சாட்சியமளித்துள்ளதை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது. தாவா 2–ம் இலக்கச் சொத்து மேல்முறையீட்டாளரின் சுவாதீனத்தில் இருந்து வரும் நிலையில், அதனை சாட்சிய வாக்குமூலம் அவர் நிரூபித்துள்ள நிலையில், 2–ம் இலக்கச் சொத்தைப் பொறுத்து தாவா அனுமதிக்கப்பட்டுள்ளது தவறு. எனவே, பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.4/2016 வழக்கில் வழங்கியுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து உத்தரவிட வேண்டும்.

**<u>10. மேல்முறையீட்டு வழக்கு எண்.1/2021 வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனைகள் : –</u>**

1. இந்த மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா? மற்றும் விசாரணை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்யப்படக்கூடியதா?
2. மேல்முறையீட்டாளர்கள்/1, 3 பிரதிவாதிகளுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

**<u>11. மேல்முறையீட்டு வழக்கு எண்.2/2021 வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனைகள் :–</u>**

1. இந்த மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா? மற்றும் விசாரணை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்யப்படக்கூடியதா?

2. மேல்முறையீட்டாளர்/2-ம் பிரதிவாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

12. முழு விசாரணைக்கு பிறகு, இருதரப்பு சாட்சிய, சான்றாவணங்களைப் பரிசீலனை செய்த விசாரணை நீதிமன்றம் பிறப்பித்துள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ஆட்சேபித்து மனக்குறைவுற்ற அசல் வழக்கின் பிரதிவாதிகளால் இவ்விருமேல்முறையீடானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

13. இவ்விரு மேல்முறையீட்டு வழக்கிலும் இருதரப்பிலும் கூடுதல் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. கூடுதல் சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>14. மே.மு.வ.எண்.1/2021 மற்றும் மே.மு.வ.எண்.2/2021 வழக்கில் பிரச்சனை எண்களுக்கான தீர்வுகள் :-</u>

14.1. வழக்குரை, எதிர்வழக்குரை, இருதரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பரிசீலிக்கப்பட்டது. தாவா 1-ம் அயிட்டச் சொத்தில் உணவு விடுதிக்கான கட்டிடமும், 2-ம் அயிட்டச் சொத்தில் வாடிக்கையாளர்களின் வாகனங்களை நிறுத்தி வைக்கும் காலியிடமாகவும் அமைந்துள்ளதாகவும், 1 முதல் 4 வாதிகளும், 1-ம் பிரதிவாதியும் சேர்ந்து 14.01.1995 அன்று தாவா 1-ம் இலக்கச் சொத்தைப் பொறுத்து பதிவு செய்யப்படாத வாடகை ஒப்பந்தம் எழுதிக்கொள்ளப்பட்டதாகவும், முன்பணமாக ரூ.2,50,000/-ஐ வாதிகள், 1-ம் பிரதிவாதிக்கு செலுத்தியுள்ளதாகவும், வாதிகள் மேற்படி 1-ம் இலக்கச் சொத்தில் "ஸ்ரீ ஆரியபவன் ஹோட்டல்" என்ற பெயரில் உணவு விடுதி நடத்தி வருகின்றனர் என்றும் வாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிக்கு ஆதரவாக வா.சா.ஆ.1 ஆன 14.01.1995 ஆம் தேதியிட்ட வாடகை ஒப்பந்தப் பத்திரம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் பதிவு செய்யப்படாததாக காணப்படுகிறது. இருப்பினும் மேற்படி ஆவணத்திற்கு அபராத முத்திரைக் கட்டணம் வசூல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

14.2. வா.சா.ஆ.1 ஆவணத்தைப் பரிசீலிக்கையில், 1–ம் பிரதிவாதியான ஸ்ரீ ராஜலட்சுமி ஹோட்டல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் 1 முதல் 4 வாதிகளுக்கு 1–ம் இலக்கச் சொத்தை வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும், ரூ.2,50,000/–ஐ 1–ம் பிரதிவாதி நிறுவனமானது முன்பணமாக பெற்றுக்கொண்டதாகவும், மாத வாடகை ரூ.10,000/– என நிர்ணயிக்கப்பட்டதாகவும் வாசகங்கள் காணப்படுகிறது.

14.3. வா.சா.ஆ.2 ஆன 20.02.2010 ஆம் தேதியிட்ட வாடகை ஒப்பந்தம் பரிசீலனை செய்யப்பட்டது. மேற்படி ஆவணத்தைப் பரிசீலித்ததில், 3 மற்றும் 4 வாதிகள் 1–ம் பிரதிவாதியுடன் சேர்ந்து தாவா 2–ம் இலக்கச் சொத்து தொடர்பாக வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டுள்ளதும் முன்பணமாக 1–ம் பிரதிவாதியின் நிறுவனத்திற்கு ரூ.1,00,000/–ஐ வாதிகள் செலுத்தியுள்ளதாகவும் வாசகங்கள் காணப்படுகிறது. மேற்படி ஆவணமும் பதிவு செய்யப்படாத ஆவணமாக இருக்கும் நிலையில், அந்த ஆவணத்திற்கும் அபராத முத்திரைத் தீர்வையானது வசூல் செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது.

14.4. 2 மற்றும் 3 எதிர்வாதிகளின் தகப்பனார் ராஜசேகரன் காலமாகிவிட்ட பிறகு வழக்குச் சொத்துக்கள் மற்றும் குடும்பச் சொத்துக்களைப் பொறுத்து 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டுள்ளதாகவும், மாத வாடகையை பலமடங்கு கூட்டிக்கொடுக்கும்படி 2015 ஆம் ஆண்டு மே மாதம் முதல் பிரதிவாதிகள், வாதிகளை வற்புறுத்தி வந்தனர் என்றும், வாதிகளை பலவந்தமாக வெளியேற்ற முயற்சித்தனர் என்றும் வழக்குரையில் விபரங்கள் கூறப்பட்டுள்ளது.

14.5. 1–ம் பிரதிவாதி நிறுவனம் மற்றும் அதன் நிர்வாக இயக்குநரான 3–ம் பிரதிவாதி தரப்பில் தற்போது வரை வாதிகளுடன் சுமூகமான உறவில் இருந்து வருவதாகவும், தற்போதும் வாதிகள் அங்கு நல்லமுறையில் உணவகம் நடத்தி வருவதாகவும், எப்போதும் வாதிகளை அங்கிருந்து வெளியேற்ற முயற்சிக்கவில்லை என்றும், வாடகையை உயர்த்துவது பற்றி சுமூகமான பேச்சுவார்த்தை நடந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14.6. 2–ம் பிரதிவாதி தரப்பில் வழக்குச் சொத்துக்கள் 1, 3 பிரதிவாதிகள் உட்பட 7 நபர்களுக்கு 02.03.1990 ஆம் தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் தனித்துப் பாத்தியப்பட்டது என்றும், 2–ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் மேற்படி சொத்துக்கள் இருந்து வருகிறது என்றும், வாதிகள் வழக்குச் சொத்தில் அனுபவத்தில் எப்போதும் இல்லை என்றும் தெரிவித்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

14.7. வாதிகள் வழக்குச் சொத்தில் உணவகம் நடத்தி வருவதை 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், 2–ம் பிரதிவாதி மட்டும் அச்சங்கதியை மறுத்து எதிர்வாதம் செய்துள்ளார். இருப்பினும் 2–ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக தன்னை விசாரித்துக்கொண்டதில் குறுக்கு விசாரணையின்போது,

"எனது கடைக்கு அருகில் தான் தாவா சொத்து அமைந்துள்ளது. 15 வருடமாக வாதி ஹோட்டல் நடத்தி வருகிறார் என்றால் சரிதான்".

"வாதி தாவா சொத்தை ராஜலட்சுமி ஹோட்டல் பிரைவேட் லிமிடெட்டிடமிருந்து வாடகைக்குப் பிடித்து நடத்தி வருகிறார் என்றால் சரிதான்" என சாட்சியம் அளித்துள்ளார்.

வாதி தரப்பில் வாடகை ஒப்பந்தங்கள், வாடகை ரசீதுகள், மின்கட்டண ரசீதுகள் மற்றும் வணிகவரித்துறையில் அங்கீகாரம் பெற்றதற்கான பதிவு, தொழிலாளர் உதவி ஆய்வாளரிடமிருந்து பெறப்பட்ட பதிவுச் சான்று உள்ளிட்ட ஆவணங்கள் உணவகம் நடத்தி வருவதை நிரூபிக்கும் பொருட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், முதலில் தனது எதிர்வழக்குரையில் அதை மறுத்த 2–ம் பிரதிவாதியும் நீதிமன்றத்தில் சாட்சியமளித்தபோது அதனை ஏற்றுக்கொண்டுள்ளார்.

14.8. இவ்வாறாக வழக்குச் சொத்தின் சுவாதீனத்தில் வாதிகள் இருந்து உணவகம் நடத்தி தொழில் செய்து வருவது மற்றும் தாவா 2–ம் இலக்கச் சொத்தை வாடகைக்கு பிடித்து கார் பார்க்கிங்கிற்காக பயன்படுத்தி வருவது உள்ளிட்ட சங்கதிகள் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேற்படி சங்கதியை விசாரணை நீதிமன்றமும் உறுதிப்படுத்தியுள்ளது.

14.9. தற்போது மே.மு.வ.எண்.1/2021 வழக்கில் மேல்முறையீட்டாளர் அதாவது அசல் வழக்கின் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள மேல்முறையீட்டு வாதம் என்னவென்றால், 4–ம் வாதி/வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், 3–ம் பிரதிவாதியுடன் அவருக்கு எவ்விதமான பிரச்சனையும் இல்லை என்றும், நட்புடன் தான் உள்ளார் என்றும், 2–ம் பிரதிவாதி தான் இடைஞ்சல் செய்கிறார் என்றும் சாட்சியமளித்துள்ள நிலையில், எவ்வித இடைஞ்சலும் செய்யாத நட்புடன் உள்ள 1 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு எதிராகவும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பிறப்பித்துள்ளது தவறு என்பதேயாகும். நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரத்தை தேவையின்றி வழங்கும்போது அதனை வாதி தரப்பு ஒரு ஆயுதமாக பயன்படுத்த வாய்ப்பளிக்கும் என்று தெரிவித்து வாதிடப்பட்டது.

14.10. மே.மு.வ.எண்.2/2021 வழக்கின் மேல்முறையீட்டாளர் அதாவது அ.வ.எண்.4/2016 வழக்கின் 2–ம் பிரதிவாதி தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதம் என்னவென்றால், 7 நபர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் 3–ம் பிரதிவாதியிடமிருந்து மட்டும் வாடகை ஒப்பந்தம் பெற்றுள்ளது தவறு என்பதும், வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் முழுமையான ஆவணங்கள் அல்ல என்பதும் ஆகும்.

14.11. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களுக்கு அபராத முத்திரைத் தீர்வையானது செலுத்தப்பட்டுள்ள நிலையில், மேற்படி ஆவணங்களை துணை நோக்கத்திற்காக நீதிமன்றம் பரிசீலிக்க முடியும். அவ்வாறான ஆவணங்களை நீதிமன்றம் தவிர்த்துவிட்டுப் பார்த்தாலும் 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தில் வாதிகள் உணவகம் நடத்தி வருவது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 2–ம் பிரதிவாதியும் தனது குறுக்கு விசாரணையில், வாதிகள் உணவகம் நடத்தி வருகின்றனர் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளது குறிப்பிடத்தகுந்தது. வாடகை ரசீதுகள் உள்ளிட்ட ஆவணங்களிலும் உணவகம் நடத்தி வருவதற்கான வா.சா.ஆ.6 பதிவுச் சான்று, வா.சா.ஆ.8 தொழிலாளர் உதவி ஆய்வாளரிடமிருந்து பெறப்பட்ட பதிவுச் சான்று உள்ளிட்ட ஆவணங்கள் வாதிகள் வழக்குச் சொத்தில் உணவகம் நடத்தி வருகின்றனர் என்பதை நிரூபிக்க போதுமானதாக உள்ளது.

14.12. வழக்குச் சொத்து 7 நபர்களுக்கு பாத்தியமானது என்றும், அதனால் 3-ம் பிரதிவாதியிடமிருந்து பெற்ற வாடகை ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் மே.மு.வ.எண்.2/2021 வழக்கின் மேல்முறையீட்டாளர் சார்பாக வாதிடப்பட்டது. பி.வா.சா.ஆ.1 ஆன 21.03.1990 ஆம் தேதியிட்ட கிரைய ஆவணத்தைப் பரிசீலித்ததில், ராஜசேகரன், சகுந்தலா, உஷாராணி, வசந்தகுமாரி, பரமேஸ்வரி, 2, 3 பிரதிவாதிகள் ஆகியோரால் பழனி தாலுகா, பழனி டவுன், டி.எஸ்.எண்.769/1-ல் 9346 சதுரடி இடமானது கிரையம் பெறப்பட்டுள்ளது தெரியவருகிறது. பி.வா.சா.ஆ.2 ஆன 22.10.2001 ஆம் தேதியிட்ட கிரைய ஆவணத்தைப் பரிசீலித்ததில், பழனி ஸ்ரீ ராஜலட்சுமி ஹோட்டல் பிரைவேட் லிமிடெட்டிற்காக அதன் மேனேஜிங் டைரக்டர் ராஜசேகரன் மற்றும் இதர டைரக்டர்கள் அனைவரும் சேர்ந்து 3-ம் பிரதிவாதிக்கு 29.04.1988 ஆம் தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்பட்ட சொத்தில் அதாவது டி.எஸ்.எண்.769-ல் உள்ள சதுரடி 12636.1/4-ல் சதுரடி 795-ஐ மட்டும் கிரையம் கொடுத்துள்ளது தெரியவருகிறது.

14.13. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தைப் பரிசீலித்ததில், ராஜசேகரன், அவரது மனைவி, மகன்கள் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் அனைவருமே ஸ்ரீராஜலட்சுமி ஹோட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தில் இயக்குநர்களாக இருந்துள்ளனர் எனத் தெரியவருகிறது. மேலும் 2-ம் பிரதிவாதி தனது குறுக்கு விசாரணையில், 3-ம் பிரதிவாதி சூர்யநாராயணன் ராஜலட்சுமி ஹோட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற 1-ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு நிர்வாக மேலாளர் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் 1-ம் பிரதிவாதி நிறுவனத்திடமிருந்து வாதிகள் தாவா சொத்தை வாடகைக்குப் பிடித்து நடத்தி வருகின்றனர் என்றும், வாதிகள் 15 வருடமாக ஹோட்டல் நடத்தி வருகின்றனர் என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். 3-ம் பிரதிவாதி தான் 1-ம் பிரதிவாதி நிறுவனத்தின் நிர்வாக மேலாளர் என 2-ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ள நிலையில், மற்ற பிரதிவாதிகள் எழுதிக்கொடுக்கவில்லை என அவர் ஆட்சேபிப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. அதிலும் குறிப்பாக 15 வருடமாக வாதிகள் உணவகம் நடத்தி வருவதை ஏற்றுக்கொண்டு சாட்சியமளித்துவிட்டு, தற்போது அதனை சட்ட முரணானது என அவர் மறுக்க முடியாது. மேற்கண்ட

**காரணங்களின் அடிப்படையில் 2-ம் பிரதிவாதிக்கு எதிராக விசாரணை நீதிமன்றம் நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்து தீர்ப்பளித்துள்ளது சரியானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.**

**14.14. 1 மற்றும் 3 பிரதிவாதிகளைப் பொறுத்த வரை வாதிகளுடன் அவர்கள் எவ்வித பிரச்சனையும் செய்யவில்லை என்றும், நட்புடன் தான் உள்ளார்கள் என்றும் வா.சா.1 சாட்சியமளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தகுந்தது. அதேசமயம் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆன வாடகை ஒப்பந்தங்களை 1-ம் பிரதிவாதி நிறுவனத்திடமிருந்தே வாதிகள் பெற்றுள்ளனர். 2-ம் பிரதிவாதி, 1-ம் பிரதிவாதி நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவராக உள்ள நிலையில், 1-ம் பிரதிவாதியின் நிறுவனத்தையும், அதன் நிர்வாக இயக்குனரையும் தரப்பினர்களாகச் சேர்த்து நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளதில் எவ்வித பிழையும் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.**

**14.15. வாதிகள் கோரியுள்ளது தாவா சொத்துக்களிலிருந்து சட்டப்படியான வழிகளின் மூலம் வெளியேற்றும் வரை சுவாதீன அனுபவத்திற்கு தடையோ, இடைஞ்சலோ செய்யக்கூடாது என்ற பரிகாரமே ஆகும். அதாவது Due process of law வெளியேற்றப்படும் வரை சுவாதீன அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என்பது சட்டப்படியானதே ஆகும். அவ்வாறான நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரத்தை விசாரணை நீதிமன்றம் பிறப்பித்ததால் 1 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு எவ்வித இடையூறும் ஏற்படுவது இல்லை. சொத்தின் சுவாதீனத்தில் இருப்பவரை சட்டப்படியான முறைகளால் அன்றி வெளியேற்ற முடியாது. அவ்வாறிருக்க, விசாரணை நீதிமன்றம் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பித்துள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் குறுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே மேற்கண்ட எழுவினாக்களுக்கு தீர்வுகள் காணப்படுகிறது.**

**15. மே.மு.வ.எண்.1/2021**

முடிவாக,

அ) மேல்முறையீட்டாளர்கள்/1, 3 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்முதல் மேல்முறையீடானது செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்தும்,

ஆ) விசாரணை நீதிமன்றமான பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.4/2016 வழக்கில் 21.12.2020 ஆம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்படுகிறது.

**16. மே.மு.வ.எண்.2/2021**

முடிவாக,

அ) மேல்முறையீட்டாளர்/2–ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்முதல் மேல்முறையீடானது செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்தும்,

ஆ) விசாரணை நீதிமன்றமான பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.4/2016 வழக்கில் 21.12.2020 ஆம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்படுகிறது.

இந்த பொதுவான தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரிடையாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, இன்று என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் தீர்ப்பு அவையறிய பகரப்பட்டது.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2026.03.17 17:37:32 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பழனி.**

| | | |
|---|---|---|
| **மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** | : | இல்லை |
| **எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** | : | இல்லை |

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2026.03.17 17:37:39 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பழனி.**